மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிவடைந்து விட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மோட்டார் விசையேற்றம் வாங்கப்பட்டு அவை பொருத்தப்பட வேண்டியிருக்கிறது. மேற்குறிப்பிட்ட குழாய்கள் எந்த அள வுக்கு குறைந்துள்ளன என்று முடிவு செய்த பின்னுலே இந்தப் பணிக்கு முடிவான தொகை செலுத்தப்படும் என்று கூறப்பட்டி ருக்கிறது. வேலை முடிந்து விட்டதா, இல்லையா என்பதுபற்றித் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப் படும்.

மு.ப. 9–30 திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்தக் குழாய்கள் வாங்கப்பட்ட நேரத்தில் இந்த மூன்று பஞ்சாயத்துக்களுக்காக என்று வாங்கப்பட்டன. அவற்றில் சங்கான்குடியிருப்பில் வேலை முடிவாகிவிட்டது. பாக்கி இரண்டு பஞ்சாயத்துக்களிலும் வேலை முடியாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இந்தப் பஞ்சாயத்துக்களில் மேல் நிலை நீர்த் தேக்கத்திற்காக குழாய் இல்லை என்று சொல்லாமல், வேலையை முடிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் தனிக் கேள்வி கொடுத்தால், மேலும் விவரம் சேகரித்துக் கொடுக்கிறேன்.

ரெகுநாதபுரத்தில் வெட்டப்பட்ட கிணறு

* 67 வினு—திரு. எம். பூபதி : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் ரெகுநாதபுரத்தில் ரூ. 50,000 செலவு செய்து 70 அடி ஆழம் வெட்டப் பட்ட கிணற்றின் நீளம், அகலம் எத்தனை அடி ?

(இ) இக்கிணற்றில் தினசரி எத்தனை கேலன் தண்ணீர் கிடைக் கின்றது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) நீளம் 33 அடி 6 அங்கு லம், அகலம் 32 அடி.

(இ) ஒரு நாளைக்கு 10,500 கேலன் தண்ணீர் கிடைக்கிறது.

Buildings for Commercial Taxes Department at Ootacamund

* 68 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(a) whether the construction of the Office Buildings of the Commercial Taxes Department has been taken up at Ootacamund; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தொழில் நுட்ப ஒப்பளிப்புக்குப் பின்னரும், இதனை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தை முடிவு செய்த பின்னரும் பணி தற்போதுதான் தொடங்கியுள்ளது. உதகமண்டலத்தில் மழை நின்ற பின்னர், இப்பணி விரைந்து நிறைவேற்றப்படும்.